இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 305 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 02 – செவ்வாய்க்கிழமை 16 ஜுன் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 305 : Thiruvalluvar Year - 2057 - Aani 02 - Tuesday 16 June 2026 - Dak 8 Pages ₹ 5.00

## 3 வயது குழந்தை பாலியல் வன்கொடுமை! குற்றச் சம்பவங்கள் தொடர்ந்தால்

# மக்களைத் திரட்டிப் போராட தி.மு.க. தயங்காது!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அரசுக்கு எச்சரிக்கை!




கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இல்லத்தில், நேற்று (15.06.2026), திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன், சந்தித்தார். அப்போது, கரு. பழனியப்பன் இயக்கும் புதிய திரைப்படமான "குக்கர்" படத்தின் தலைப்பைக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். இந்நிகழ்வின் போது, நடிகர் காளி வெங்கட் மற்றும் ஒளிப்பதிவாளர் ராஜசேகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**சென்னை, ஜுன் 16 -**

**"கும்மிடிப்பூண்டி அருகே 3 வயது குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி உள்ளது. சேலம், ஆலந்தூரில் பெண்கள் பாலியல் தொல்லைக்குள்ளாகி இருக்கின்றனர். தமிழ்நாடு முழுவதும் இதுபோன்ற குற்றச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இனியும் தமிழ் நாட்டில் குற்றச்சம்பவங்கள் தொடர்ந்தால், கழகத் தலைவரின் அனுமதியைப் பெற்று, மக்களைத் திரட்டி வீதியில் இறங்கிப் போராட தி.மு.க. தயங்காது" என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

கும்மிடிப்பூண்டி அருகே 3 வயது குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்து புதரில் வீசப்பட்டதில் அக்குழந்தை உயிரிழந்தது அறிந்து அதிர்ச்சி அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடித்துக் கடுமையான தண்டனையைக் காவல்துறை பெற்றுத் தர வேண்டும்.

வடக்கே எங்கோ தூரத்தில்



நடந்ததாக நாம் செய்திகளில் படித்த குற்றச் சம்பவங்கள் எல்லாம், இந்த #SofaModel ஆட்சியில் தமிழ்நாட்டில் தினசரி தொடர்கதை ஆவது கண்டிக்கத்தக்கது.

தேர்தல் பிரச்சாரத்தில் சட்டத்துக்குப்புறம்பாக வாக்குக் கேட்பதற்கான toolஆககுழந்தைகளைப் பயன்படுத்திய முதலமைச்சர், குழந்தைகள், பெண்கள் பாதுகாப்பில் தொடர்ந்து கோட்டை விடுகிறார்.

சேலத்தில் 50 மேற்பட்ட பெண்களுக்கு அவருடைய கட்சியைச் சேர்ந்தவர் பாலியல் தொல்லை கொடுத்தது ஆலந்தூரில் அவரது கட்சி பிரமுகர் கணவனை இழந்த பெண்ணிடம் அத்துமீறியது சிங்கப் பெண் படையை உருவாக்கிய சில தினங்களில் சிவகங்கையில் பெண் காவலருக்கே பாலியல் தொல்லை.

இப்படி தமிழ்நாடு முழுக்க சட்டம் - ஒழுங்கு, வெண்டிலேட்டரில் வைக்கும் அளவுக்கு செத்துக் கொண்டிருக்கிறது.

ஆட்சி அமைத்து ஒரு மாதத்துக்கு மேலாகியும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முதலமைச்சர் எந்த ஓர் உறுதியான நடவடிக்கையையும் எடுப்பது போல தெரியவில்லை.

அடுத்த கட்சி ஆட்களை Purchase செய்யும் நேரத்தில், கொஞ்சமாவது சட்டம் ஒழுங்கை protect செய்ய முதலமைச்சர் அக்கறை காட்ட வேண்டும்.

தமிழ்நாட்டில் சீரழியும் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற உடனே காவல்துறை அதிகாரிகள் அளவில் உயர்நிலைக் கூட்டத்தை நடத்தி, மண்டல மாவட்ட அளவிலான காவல்துறை அதிகாரிகளுக்கு குற்றங்களைத் தடுப்பதற்கான கடுமையான உத்தரவுகளை முதலமைச்சர் பிறப்பிக்க வேண்டும்.

இனியும் இது மாதிரியான குற்றச்சம்பவங்கள் தொடர்ந்தால், எங்கள் தலைவர் அவர்களின் அனுமதியைப் பெற்று, மக்களைத் திரட்டி வீதியில் இறங்கிப் போராடவும் தி.மு.கழகம் தயங்காது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## 3 வயது குழந்தை பாலியல் வன்கொடுமை!

# பொதுமக்கள் கொந்தளிப்பு - சாலைமறியல்!

### த.வெ.க. ஆட்சியில் நாள்தோறும் தொடரும் அவலம்!

திருவள்ளூர், ஜுன் 16 -

கும்மிடிப்பூண்டி அருகே வடமாநில இளைஞர் ஒருவர் 3 வயது பெண் குழந்தையை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி, முட்புதரில் வீசிச் சென்றுள்ளார். இச்சம்பவம் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து, இச்சம்பவத்தில் ஈடுபட்ட வடமாநில இளைஞரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பேட்டை பகுதியில் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இங்கு பீகார், உத்தரப் பிரதேசம், ஒடிசா, ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான வடமாநிலத் தொழிலாளர்கள் குடும்பத்துடன் தங்கி வேலை செய்து வருகின்றனர்.

அவ்வாறு அங்குள்ள குடியிருப்பில் வசித்து வரும் வடமாநிலத் தம்பதியினரின் 3 வயது பெண் குழந்தை நேற்று முன்தினம் மாலை திடீரென காணாமல் போனது. இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர் மற்றும் பொதுமக்கள் குழந்தையைத் தேடி வந்தனர். அப்போது, அந்தப் பகுதியில் இயற்கை உபாதை கழிக்கச் சென்ற பெண்கள் சிலர், அங்குள்ள ஒரு முட்புதரில் அந்தக் குழந்தை காயங்களுடன், உடல் நலம் குன்றிய நிலையில் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். தொடர்ந்து, அவர்கள் குழந்தையை அங்கிருந்து மீட்டனர்.

மீட்கப்பட்ட குழந்தைக்கு உடனடியாக கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டது.

பின்னர், மேல் சிகிச்சைக்காக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு குழந்தைக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் அக்குழந்தை நேற்று முன்தினம் இறந்து விட்டது.

குழந்தையிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட வடமாநில வாலிபரைப் பொதுமக்கள் பிடித்துத் தர்மஅடி கொடுத்துக் காவல்துறையிடம் ஒப்படைத்தனர். இதற்கிடையே, ஒரே அறையில் தங்கியிருந்த வடமாநில இளைஞர்கள் 4 பேர் சேர்ந்து குழந்தையைக் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளதாகவும், அவர்கள் அனைவரையும் கைது செய்யக் கோரியும் பொதுமக்கள் சிப்காட் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு சுமார் இரண்டு மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### வடமாநில இளைஞர் கைது!

பொதுமக்களுடன் காவல்துறையினர் நடத்திய சமரசப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, சிறுமியிடம் அத்துமீறலில் ஈடுபட்ட பீகார் மாநிலத்தைச் சேர்ந்த விபின் மந்தி (19) என்ற வாலிபரைக் காவல்துறையினர் போக்ஸோ சட்டத்தின் கீழ் கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

குழந்தை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு உயிரிழந்த சம்பவத்தை கண்டித்து, கும்மிடிப்பூண்டி சிப்காட் காவல் நிலையத்தை முற்றுகையிட்ட பொதுமக்களை, போலீசார் தடுத்து நிறுத்தினர்.

இதனால் கொந்தளிப்பு அடைந்த மக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை காவல்துறையினர் குண்டுகட்டாக தூக்கிச் சென்று கைது செய்ததால் பரபரப்பு நிலவியது.

கும்மிடிப்பூண்டியில் 3 வயது குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்த குற்றவாளிக்கு பொதுமக்கள் தர்ம அடி கொடுத்தனர். பீகாரை சேர்ந்த பிபின் மஞ்சியை பொதுமக்களே பிடித்து போலீஸாரிடம் ஒப்படைத்த வீடியோ காட்சி வெளியாகி உள்ளது.

இதற்கிடையே, நீதிக் கேட்டு போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களிடம் த.வெ.க. வினர் வாக்குவாதம் செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

## கடலூர் மாவட்டம் – பரங்கிப்பேட்டை அருகே ஒன்றிய அரசு

# ஹைட்ரோ கார்பன் கிணறுகள் அமைக்கும் திட்டம்!

### மாநில அரசு தடுத்து நிறுத்திட முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

**சென்னை, ஜுன் 16 -**

**"கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை அருகே ஹைட்ரோ கார்பன் கிணறுகள் அமைக்கும் ஒன்றிய அரசின் திட்டத்தை மாநில அரசு தடுத்து நிறுத்திட வேண்டும்" என்று முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை அருகே கடற்பகுதியில் நான்கு ஹைட்ரோகார்பன் கிணறுகள் அமைக்கும் இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் நிறுவனத்தின் முயற்சி கவலை அளிக்கின்றது.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான கழக



ஆட்சியின்போது, தமிழ்நாட்டு வேளாண் பெருங்குடி மக்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழலின் நலன் கருதி தமிழ்நாட்டில் எந்த வகையிலான ஹைட்ரோகார்பன் திட்டங்களுக்கும் அனுமதி இல்லை என்ற உறுதியான நிலைப்பாட்டை மேற்கொண்டோம்.

ONGC நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் இருப்பிற்கான ஆய்வு மேற்கொள்ள விண்ணப்பித்த போதுகூட அந்த முயற்சியினைத் தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்திடும் வகையில் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் (State Environment Impact Assessment Authority SEIAA) இத்திட்டத்திற்கான சுற்று சூழல் அனுமதியினை வழங்கக் கூடாதெனத் தக்கவகையில் அறிவுறுத்தினோம்.

### மாநில அரசு எதிர்ப்பு தெரிவிக்கவேண்டும்!

அதேபோல், கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை அருகே கடற்பகுதியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த ஹைட்ரோகார்பன் திட்டத்திற்கும் புதிதாகப் பதவியேற்றிருக்கும் அரசு தனது உறுதியான எதிர்ப்பைத் தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டும்.

மேலும், கடற்பகுதியில் இயற்கை வளங்களையும் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் கடுமையாகப் பாதிக்கும் இத்திட்டத்திற்கு மாநில கடற்கரை மண்டல மேலாண்மை ஆணையம் ( Tamil Nadu State Coastal Zone Manangement Authority ) எத்தகு அனுமதியும் வழங்கக்கூடாது என தமிழ்நாடு அரசு உரிய வகையில் அறிவுறுத்தி தடுத்து நிறுத்திட வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்துகின்றது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.